# இரண்டாம் இடைப் பருவத் தேர்வு – 2022

## தமிழ்

10 - ஆம் வகுப்பு

காலம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

### பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதவும். 7 X 1 = 7

1. இரு நாட்டு அரசர்களும் தும்பைப்பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ..............
அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

2. புதுக்கோட்டை என்ற ஊர்ப்பெயரின் மரூஉவை எழுதுக.
அ) புதுவை ஆ) புதுகோட்டை இ) புதுகை ஈ) புதுக்கோட்டை

3. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ......................
அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

4. வண்ணமும், சுண்ணமும் இலக்கணக் குறிப்புத் தருக ......................
அ) உவமைத் தொகை ஆ) எண்ணும்மை
இ) உம்மைத்தொகை ஈ) பண்புத்தொகை

பின்வரும் பாடலைப் படித்து 5,6,7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.

"பகர்வனர் திரிதரு நகரவீதியும்;
பட்டினும் மயிரினும் பருத்திநூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும் ;
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்

5. இவ்வடிகள் இடம் பெற்ற நூல் எது?
6. பாடலில் அமைந்துள்ள மோனையை எடுத்து எழுதுக.
7. காருகர் - பொருள் தருக.

### பகுதி - II (பிரிவு - 1)

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும். 2 X 2 = 4

8. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?
9. குறள் வெண்பாவின் இலக்கணம் யாது?
10. வாழ்வில் தலைக்கனம், தலைக்கனமே வாழ்வு என்று நாகூர் ரூமி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்?
11. குறிப்பு வரைக. அவையம்.

### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 2 X 2 = 4

12. வெட்சித்திணை என்றால் என்ன?
13. வரப்போகிறேன், முன்னுக்குப்பின் என்ற தொடரைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

14. கலைச்சொற்கள் தருக.
அ) Document ஆ) Belief

15. பகுபத உறுப்பிலக்கணம் தருக : மயங்கிய

## பகுதி - III

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக. வினா எண். 17க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 3 X 3 = 9

16. 'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

17. அடிபிறழாமல் எழுதுக.
'தூசும்துகிரும் ............ மறுகும்' என்ற பாடல்.

18. ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் தருக. *(அல்லது)*
தீவக அணியின் வகைகள் யாவை?

## பகுதி - IV

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3 X 4 = 12

19. மாணவன் கொக்கைப்போல், கோழியைப்போல் இருக்க வேண்டும் என்பதை உரையாடல் வடிவில் எழுதுக.

20. உங்கள் தெருவில் பழுதடைந்துள்ள மின்விளக்குகளைச் சரி செய்யக் கூறி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் வரைக.

21. சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து ஐந்து முழக்கத்தொடர்கள் எழுதுக.

22. சுற்றுச் சூழலைப் பேணுவதே இன்றைய அறம் என்ற தலைப்பில் பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புத் தயார் செய்க.

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2 X 7 = 14

23. நயம் பாராட்டுக.

*கவிஞன் யானோர் காலக் கணிதம்*
*கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!*
*புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்*
*பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம் !*
*இவை சரியென்றால் இயம்புவதென் தொழில்*
*இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!*

24. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிகவீதிகளை, இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

25. இராமானுசர் - பூரணரிடம் எவ்வாறு திருமந்திர திருவருள் பெற்றார்?

26. நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு என்னும் குறிப்புகளைக் கொண்டு 'மாணவப்பருவமும் நாட்டுப்பற்றும்' என்ற தலைப்பில் கட்டுரை வரைக.



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593